# தூறல்

(கவிதைத் தொகுப்பு)



வெளியீடு

தமிழ் மன்றம்

யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

சண்டிலிப்பாய்

யாழ்ப்பாணம்

2008

# தூறல்

(கவிதைத் தொகுப்பு)

வெளியீடு
தமிழ் மன்றம்
யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
சண்டிலிப்பாய்
யாழ்ப்பாணம்
2008

# தூறல் – கவிதைத்தொகுப்பு


| | |
|---|---|
| ஆக்கம் | - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் |
| வெளியீடு | - தமிழ்மன்றம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| முதற்பதிப்பு | - 2008, வைகாசி |
| அட்டைப்படம் | - செல்வன். அ. ஜோன்ஜிப்றிக்கோ |
| பக்கங்கள் | - VI + 36 |
| பிரதியாக்கம் | - ஆர். எஸ் பிரின்டேர்ஸ் சண்டிலிப்பாய் |


## கவிதைகளோரு.....

| | |
|---|---|
| க. சோபிகா | - தரம் 11 |
| த. கடோற்கஜன் | - தரம் 11 |
| ந. துஷாந்தி | - தரம் 11 |
| அ. சுபாசினி | - தரம் 12 |
| ர. ரகீதா | - தரம் 12 |
| ச. கலையரசி | - தரம் 12 |
| லோ. கம்சலா | - தரம் 13 |
| தி. சுரேஸ் | - தரம் 13 |
| ச. கஜேந்திரன் | - தரம் 13 |
| த. வித்தியா | - தரம் 13 |
| ச. டனுஷா | - தரம் 13 |
| சி. சருபன் | - தரம் 13 |
| அ. டில்லிபவீனா | - தரம் 13 |

# கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துரை

யா / சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் கவிதை எழுதும் திறனை மேம்படுத்த எடுத்த முயற்சியின் அறுவடையாக வெளிவரும் "தூறல்" கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துச்செய்தி தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புதிய கல்வி மறுசீரமைப்பை மையமாகக் கொண்டு மாணவர்களின் சிந்தனை ஆற்றலை வெளிப்படுத்தும் வடிகாலாக மாணவர்களின் ஆக்கங்களைத் தொகுத்து வெளியிட ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த ஆசிரியர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக நின்று நெறிப் படுத்திய அதிபருக்கும் இறையருள் செழிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு, ஆக்கங்களை வெளிப்படுத்திய மாணவச் சிறார்களுக்கு மேன்மேலும் கல்விச் செல்வம் பெருக அருள் பாலிக்குமாறு இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

"வளர்க நும்பணி வாழ்க செந்தமிழ்"

**ப.விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்
வலிகாமம்

## உதவிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

சண்டிலிப்பாய் இந்துவின் மைந்தர்கள் வாழ
கண்டிருக்கும் ஆசானின் கனிவுள்ளம் வாழ
எண்டிசைக்கும் புகழ்பரந்து இன்பமது சூழ
மண்டியிட்டு வேண்டுகிறேன் இறைவனருள் சூழ

பல்வேறு தலைப்புகளில் 'நினைவுகளை' மீட்டு
எல்லோரும் நலம்பெறவே 'சூழல் சுத்தம் பேணி'
நற்(ற)தமிழில் உனை வாழ்த்த 'தேடுகிறேன் உன்னை'
பத்திரமாய் உளம் மகிழ்ந்து 'ஸ்திரமாய்க் காதலிப்பாய்'

பண்பாக எமை வாழ வைத்திடுவர் 'உழவர்'
கண்காண 'இவ்வாழ்க்கை தேவையில்லை' உனக்கு
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் 'தமிழமுதை'
கண்ணாகப் போற்றிடுவர் 'அஸ்தமித்த பிறகாயும்'

வாழ்வதற்கு வழிகாட்டும் 'தாய்ப் பண்பை உணர்ந்து'
வாழ்வாங்கு 'வாழப்பழகிக்கொள்' வாழ்நாளில்
கூழ்தன்னை உண்டாலும் எனக்கு 'எல்லாம் நீயே'
பாழ்பட்ட இவ்வுலகை அன்பினால் ஆட்சி செய்வாய்

நன்றாக வாழ்ந்தபோது 'சுனாமி வந்ததனால்'
ஒன்றாக சொத்து சுகம் அழிந்து நிற்கும் 'பெண்ணே'
நன்றாக வாழ்வதற்கு 'வேண்டும் சமாதானம்'

என்றாயே நன்றாக வாழ் 'என் சினேகப் பூவே'
கோடு போட்டு வாழும் தமிழா 'போரின் கொடுமையைப் புரிந்துகொள்'

பாடுபட்டு வளர்த்துவிட்ட 'கல்லூரித் தாயை'
ஊடுருவிச் செல்லும் உன்தன் நெஞ்சத்தில் வாழ
ஆடு 'கலையும் வாழ்க்கையும்' ஒன்றெனவே மதித்து

நிரந்தரமாய் சிறந்திடவே 'என்மாளிகை வீடு'
புரந்தரனாய்ப் புகுந்திடுவாய் 'நட்புடனே நீயும்'
சிறந்திடுமே 'இன்று எம் வாழ்வு' உன்னினிய பார்வையினால்
பறந்திடுமே துன்பமெல்லாம் உன்தன் அருள் வீச்சினிலே

பாரினிலே மக்கள் படும் அவலங்களை நோக்க
நேரினிலே யார்வருவார் பாவங்களைப் போக்க
யாரைத்தான் நம்புவதோ 'பொறுக்கவில்லை எம்நெஞ்சம்'
ஏரைத்தான் நம்பிடுவோம் 'சமாதானப் புறாவே'

கவி எழுத வழிகாட்டும் ஆசானை என்றும்
புவி போற்ற வாழ்த்திடுவாய் வாயார நீயும்
தவிக்காமல் கவியெழுதி பெற்றிடுவாய் இன்பம்
தவிக்காமல் தந்திடுவாள் சக்திதனை வாணி

**செல்வி.வி.கந்தையா**
உதவிக் கல்விப் பணிப்பாளர், (தமிழ்)
வலயக்கல்வி அலுவலகம்
வலிகாமம்

## கல்லூரி அதிபர்
## களிப்புடன் வாழ்த்துகின்றார்

வெள்ளை உள்ளத்துப்
புள்ளினப் பறவைகள்
கள்ளமில்லாச் சிறிசுகள்
கதிர்விடும் பயிர்கள்
கொள்ளை அன்புடன்
கூடிக் குலாவும் குஞ்சுகள்
பள்ளம் மேடறியா
பருவத்துக் குழந்தைகள்
மெல்ல மெல்ல தம்மை மேலே
உயர்த்திடும் பள்ளியில்
துள்ளித்திரிவர்
துலங்கிடுவர் பல் திறன்களில்
கல்வியுடன் கனிவான
விளையாட்டுக்களும்
சொல்லித்தருகின்ற
சண்டிலிப்பாய் இந்துத் தாயின்
செல்லமடியில்
செழிப்புடன் தவழும்
நல்ல மணிகள் - நீவீர்
நலமுடன் வாழியவே
உள்ளத்துதித்த
உம்கவிப்புலமை
உயர்ந்து வளர வாழியவே!

**திரு.வ.ஸ்ரீகாந்தன்**
அதிபர்,
யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

## பிரதி அதிபரின்

## உள்ளத்திலிருந்து......

எமது கல்லூரி மாணவர்களின் கவிதை ஆக்கங்களின் தொகுப்பாக வெளிவரும் "தூறல்" எமது மாணவர்களின் படைப்புத் திறனுக்கு சான்று கூறுவதாக அமைந்து காணப்படுகின்றது. தற்காலத்தில் எழுந்த புதுக்கவிதை முயற்சிகள் பற்றி பல்வேறு விமர்சனங்கள் எழும் இவ்வேளையில் அவை பற்றியெல்லாம் கருத்திற் கொள்ளாது தம் உள்ளத்தில் உதித்த, உறுத்திக் கொண்டிருக்கின்ற விடயங்களை வெளிப்படுத்தி கவிதை களாய் பிறப்பித்துள்ளனர். கல்லூரி வாழ்க்கையில் இவர்களது இத்தகைய பயிற்சிகள் இவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உரமூட்டுவனவாக அமையும். இக்கவிதைத் தொகுப்பு வெளிவர முன்நின்று முயற்சித்த ஆசிரியர் திரு.ந.குகபரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். எனினும் ஓர் வேண்டுகோள் புதுக்கவிதை எழுதும் முயற்சியுடன் மரபுக்கவிதைகளை எழுதும் முயற்சியில் ஈடுபடவேண்டும். இதற்காக மரபுக்கவிதைகளை கற்க வேண்டும் என்ற வேண்டுதலோடு பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.ஆனந்தநடராஜா**
பிரதி அதிபர்,
யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# தூறல் குறித்து........

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் கவித்துவ வெளிப்பாடாய் புலரும் "தூறல்" கவிதை தொகுப்பானது இளையவர்களின் கன்னி முயற்சியாய் வெளிவருகிறது. தம் உள்ளத்தில் பதிந்து கருவாகிய விடயங்களை தமது இயலுமையின் நிலை நின்று இவ் இளம் படைப்பாளர்கள் கவிதையாய் பிரசவித்துள்ளனர்.

நெடிய வரலாற்றுப் புலத்தைக் கொண்ட தமிழ்க் கவிதைக் களத்தில் இக்கவிதைகளும் தூறலாய் இணைவதில் நாம் மகிழ்வடைகின்றோம். கவிதைக்குரிய அளவுகோல்களுக்கு அப்பால் அவர்கள் பேச விழைந்த விடயங்கள் அவர்களின் மொழியிலேயே இங்கு வடிவம் பெற்றுள்ளன. சுயமாய் உருப்பெற்ற இவ் எழுத்தோவியங்கள் காலச்சூழலோடு இசைந்ததாய் கதை பேசுகின்றன.

தமிழர் தம் மொழி, கலைகள் குறித்தும் நெருக்கடி நிறைந்த வாழ்வியல் புலத்தில் யதார்த்த நிலைமைகளையும், உள்ளத்தில் உந்தியெழும் அன்பு உணர்வுகளையும், மிடி நிறைந்த வாழ்விலிருந்து நிமிர்விற்கான தூண்டலையும் மையப்படுத்தியதாய் இக்கவிதைகள் அமைந்துள்ளன.

படைப்புந்தலோடு கவிதைகளை வெளிப்படுத்திய இவ் இளம் படைப்பாளர்கள் கற்றல் செயற்பாட்டோடு தம் திறன்களை மேலும் விரித்து தமது ஆளுமைகளை வளர்த்துச்செல்ல வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.ந.குகபரன்**
(தமிழ் மன்ற இணைப்பொறுப்பாசிரியர்)

வனப்பு

## தமிழமுதம்

பூவெழில் பொங்கும் பூமேடை தனில்
புவனம் போல் தவழ்ந்து வரும் தமிழமுதே – நீ
தயிர்க்கடலில் துஞ்சுகின்ற மடவன்னம்
உனைக் கேளா நாளெல்லாம் வருந்தும் என் நெஞ்சம்

ஔவையாரின் நாவிலே ததும்பி - இன்பத்
தேனாற்றில் நீந்தி வரும் கயலினமே
தென்மதுரைத் தென்னவனின் அரசினிலே – நீ
தேம்பாது வீசியது யாமறிவோம்

ஓதுவார் வாய்தனிலே அமுதமூறும் – கொல்லும்
வெஞ்சினத்தார் வெம்மனத்தை ஒழிக்கவல்ல
தீராத தீஞ்சுவையின் அதிபதியே – நீ
கோடான கோடி காலம் வாழியவே

**த.கடோற்கஜன்**

# தமிழ்

யாப்பிலாப் பாடலேனும்
யார்தரும் கவிதையேனும்
மாப்பிலாப் போல எண்ணி
மடியிலே வாங்கிக் கொண்டு
காப்பிலாத் தமிழர் நெஞ்சில்
காலாதி காலம் வாழ்ந்த
மூப்பில்லா முத்தமிழே உன்னை
முதல் முதல் வணங்குகின்றேன்

இமயம் போல் விரிந்தெழுந்தாய்
இலக்கிய சோலையாயிருந்து
மாபெரும் புலவர் வாயில்
மாண்புடனே கவிகளானாய்
செந்தாமரை முகம் படைத்த
செந்தமிழ் திருவுருவே
மன்னாதி மன்னவரும் உனை வளர்க்க
மன்றத்தினை உருவகித்தார்

தமிழ் புலவர் மடி தவழ்ந்து
தரணி மிசை மிக உயர்ந்து
தென்றலோடு பருதியோடும்
தென்னார் வளம் படுத்த நெஞ்சுயர்த்தி
இலக்கணத்தில் இசை விரிந்து தமிழ்
இனத்தவர்கள் இன்முகமாய்
வையத்து மாந்தரெல்லாம்
வைத்து ஏற்றும் தமிழ் மகளே.

காவிரி கரை தனிலே கவிபாட வைத்து விட்டு
காலகாலன் தனை கவிபாட உருமாற்றி
திருவிளை யாடல் பல புரிந்து
தீராத பெருமை பெற்று
கதிரவன் ஒளி ஏற்றி
கண் மணி போல உனை வளர்த்து
தண்ணார் கழல் பரப்பி
தன் கடமை நடாத்தும் செந்திருவே!

வள்ளுவன் போல ஒருவனுனைப் - பாட
வளம் பெற்று படர்ந்தெழுந்து
பாரதி போல ஒருவன் கவிதனைச் சூட்ட
பாண்டியர்கள் அவை வளர்த்து
கம்பன் கவி வடிக்க
கடல் எனவே அலை எழுந்து
பாரதிதாசன் பாமாலை தனைப்பாட
பாரெல்லம் பரந்திருந்த இனிய தமிழ்!

ஆவி உடல் உயிர் அனைத்து
ஆண்டாய் உனக் கென்றும்
குன்று போல் உயர்ந்து
குறு முனியின் அறிவாகி
சுந்தரப் பாட்டிசைத்து தூய தமிழ்ச் - சுரந்தருளி
சீர் மிகுந்த பூமியிலே
சிங்கார உடை உடுத்து
தமிழ் மகளே வாழி வாழி!

**க.சோபிகா**

# கலையும் வாழ்க்கையும்

மண் மீது பிறந்து விட்ட
மழலை அதன் முதல் அழுகை
பண்ணோடு கலந்து விட்ட
இராகமதன் இசை கலையே

கால் தூக்கி கையாட்டி
குழவி செய்யும் பாவனைகள்
சூல் தூக்கி சிவனாடும்
தாண்டவத்தின் நடனமதே

பெற்றவளை புரிந்து கொண்டு
பிள்ளை காட்டும் முகபாவம்
கற்றவர்கள் செய்யும் அந்த
நவரசத்தின் நாடகமே

புத்தகத்தில் கிறுக்கலிட்டு
புருவத்தில் மை தீட்டி
வித்தகத்தோர் செய்யும் அந்த
விந்தையான ஓவியமே

நிலையில்லா மனித வாழ்வில்
நிலையான பதிவுகளாய்
உயிர்ப்போடு வாழ்கின்ற
நித்தியமும் கலைகளன்றோ!

**அ.சுபாசினி**

## பொறுக்கவில்லை எம் நெஞ்சம்

ஓலைப்பாயில் ஒய்யாரமாய்க் கிடந்தோம்
ஓங்கி வளர்ந்த தென்னையின் கீழ்
ஓடிப் பிடித்து விளையாடினோம்
ஓடி எடுத்துப் பனம் பழத்தை
ஒளித்திருந்து சாப்பிட்டோம்
பரந்து கிடந்த மைதானத்தில்
பறவைகள் போல திரிந்தோம்
பல்துறையில் வேலை செய்து
பல மாடி வீடு கட்டி
பசுமையாக வாழ்ந்திருந்தோம்
எட்டிப் பார்த்தான் போர் அரக்கன்
எறியப்பட்டோம் எட்டுத்திக்கும்
இன்று எம் தென்னைகளும்
ஒளித்திருந்த பனைகளும்
கூடி வாழ்ந்த வீடுகளும் - சிதைக்கப்பட்டும்
பறந்து திரிந்த மைதானத்தில்
பல குழிகள் கிடப்பதையும்
கண் திறந்து பார்க்கும் போது
பொறுக்கவில்லை எம் நெஞ்சம்.

**ச.கஜேந்திரன்**

# தேவை தானா இவ்வாழ்க்கை

விசாலமான வீடு
விண்ணை முட்டும் முகடு
வீதி விளக்குகள் அனைத்தும்
வீட்டுக்குள் அடக்கப்பட்டன
சகோதர சந்திப்புக்கள்
சாத்தியப்படவில்லை
பயத்தின் கெடுதியால்
படுக்கை மட்டும் ஓரிடத்தில்
தாயின் கண்காணிப்பில்
தயவுடன் இருபிள்ளைகளும்
தூக்கி மூடிக் கொண்டு
துக்கத்தை வரவழைப்பர்
பிள்ளைகள் நினைவுடனே தாய்க்கு – ஒரு
சொட்டுத் தூக்கமில்லை
நாய்கள் கதைத்திடவே
பிள்ளைகள் புரளுகின்றனர்......
மீட்டுப் பார்க்கையில்
தேவைதானா இவ்வாழ்க்கை?

**ர.றகீதா**

# இன்று எம் வாழ்வு

கூட்டம் கூட்டமாய் திரிந்தும்
நித்தம் நித்தம் கடலில் நீந்தியும்
நெஞ்சில் சுமந்த நினைவுகளோடு
நிலாவொளியில் சுற்றியும்
நித்தம் அப்பா திட்டுக் கேட்டும்
நிம்மதியாய் தூங்கியதும்
ஒளி விழும் முற்றத்தில் கூட்டமாய்
உறவுகளோடு பல கதைகள் பேசி
சுதந்திரக் குயில்களைப் போல்
பாடியும் வாழ்ந்திருந்தோம்.
எண்ணற்ற பயிர்கள் வீசி எட்டுத் திக்கும்
வறுமை போக்க. எளிமையாக வாழ்திருந்தோம்
வாழ்வு என்றால் இதுதான் என்று
வானிலுள்ள தேவர்களும்
வாழ்த்தும் படி வாழ்ந்து வந்தோம்
கூடிப் பல கலைகள் செய்து
குறைவற்ற விளையாட்டினோடும்
சாதனைகள் பல புரிந்து
சந்தோசமாய் வாழ்ந்திருந்தோம்
இத்தனையும் பார்த்து விட்டு "இல்லை"
ஏற்க முடியாதென்று எறிந்தான் குண்டை எரிந்தது
இன்று எம் வாழ்க்கை.
ஓடித்திரிந்த முற்றத்தில்

ஓரடியில் பல குழிகள்
கூடிவாழ்ந்த நம் மண்ணில் குவிந்து
கிடக்கும் பிணங்கள்
பசியைத் தீர்க்கும் பயிர்கள் எல்லாம்.
பறந்தன காற்றில் - சாம்பல்களாய்
கால்களற்றும் கைகளற்றும் பார்வைகளற்றும்
பரிதவிக்கின்றன நம் உறவுகள்
படுப்பதற்கு இடமின்றி பாதையோரம் தூங்குவதும்
உண்பதற்கு உணவுகளின்றி நீண்ட
தூரம் நிற்பதுமாய் இன்று எம் வாழ்வு
தட்டிக் கேட்க கைகளின்றி தவிக்கின்றன.

ஆட்சி பல மாறினாலும்
மாறவில்லை நமது வாழ்க்கை
இன்று மலிந்த கொலைகளும்
அழிந்த வாழ்வும் தான் வாழ்வு என்று
ஏற்றுக்கொண்ட நெஞ்சங்களாய்
ஓடுகின்றன எம் மக்கள் வாழ்வு

**ச.கஜேந்திரன்**

## சமாதானப் புறாவே

சிறகுகளை விரித்து விரித்து
சிலிர்த்துக் கொள்ளும் - எங்கள்
செல்லப் புறாக்களே! நீங்கள்
குடியிருப்பது இன்னும் கூண்டுக்குள் தானா?

**ர.றகீதா**

# என் மாளிகை வீடு

மரத்து விட்ட மனங்களுடன்
ஓலையால் வேயப்பட்ட – என்
தட்டு முட்டு மாளிகையில்
நுழைகிறேன் நான்!
ஏழையாய் பிறந்து விட்டோம்
எக்காலத்தில் நிம்மதி எமக்கு? – ஆனாலும்
பணத்தால் அளவிட முடியாத பாசத்திற்கு
சொந்தக்காரி நான்
மாரியில் என் மாளிகையினுள்ளே
மழை பொழியும் - பின்
வெள்ளத்தின் ஆக்கிரமிப்பில்
தடுமாறும் என் மாளிகை
கோடையின் கொடூரத்தில்
பகலிலும் மாளிகையினுள்ளே
விளக்கெரியும்: எம் மனமும் வேகும்!
ஓலைப் பாயில் நீட்டி நிமிர்ந்து
படுத்தால், முகட்டோடு மூலம்
வான வேடிக்கைகள் பல தெரியும்.
என் மாளிகையுள்ளே
நிலா முற்றம் கூட உண்டு!

வசந்தத்தில்...... மரங்களின்
கொஞ்சும் இதமான தென்றல்
என் காயப்பட்ட மனதை
மயிலிறகாய் வருடித் தாலாட்டும்!
ஆ....... இலையுதிர் காலத்தை
சொல்லவும் வேண்டுமா!

வேகப்புயலால் .... இயற்கையின்
குப்பை தொட்டியல்லவா என் மாளிகை
ஏழை என் மாளிகையில்
நிம்மதி நிரந்தரமாவது எக்காலத்தில்........???

**த.வித்தியா**

# என் சினேகப் பூவே

எய்! என் சினேகப் பூவே என் பூவே
நறுமணம் வீசும் இதழ்கள் உன் மேடையா?.
உன்னைத் தொடுகையில் என் கைகள்
உன்னை விட்டு பிரிய மறுக்கின்றது.

என் மனதிற்குச் சொந்தமாகி
கண்களிற்கு குளிர்ச்சியைத் தருகின்றாய்.
தென்றல் வேளையில் மணம் வீசுகின்றாய்
வீசும் மணங்களில் என் உள்ளத்தை மயக்குகின்றாய்.

பூவே உன்னைப் பறிக்க ஆசையாக இருக்கின்றது.
ஆனால் பறித்தால் கவலை சூழ்கின்றது.
ஏனென்றால் சிரித்துக் கொண்டிருக்கும் நீ
பின் வாடிப் போய் சோர்ந்து விடுகின்றாய்.

ஆனாலும் உன்னைப் பறித்து என்
கைகளால் உனக்கு அடைக்கலம் தந்தேன்.
என் தேசத்தின் அடையாளமாய்
என் சினேகத்திற்கு பரிசாகக் கொடுத்தேன்.

ஒரு சில நாட்கள் கழிய உன் மெல்லிதழ்கள்
சருகாக மாறி உருகிப் போனதே!
பரிதாபம், உன் நிலையைக் கண்டதும் என் மனம்.
ஆறாத துன்பத்தை அடைந்தது.

என் சினேகப் பூவே! நீ,
மரணித்துப் போக நான் செய்தது தவறென்றேன்.
நீ மரணித்து என் மனதை
மௌனத்தில் ஆழ்த்தி விட்டாய்.

**ச.கலையரசி**

## சுனாமி வந்ததனால்

பாடசாலை விடுமுறை
புனித நாள்
தேவாலயம் நோக்கிய மக்கள் கூட்டம்
கனவுகளை நினைத்து
கோட்டை கட்டி
நின்றவர்கள் பலர்
கடற்கரை மணலில் வீடுகட்டி
விளையாடும்
சிறார்கள்
சமையலில் உல்லாசமாய்
ஈடுபட்ட மங்கையர்
விடுமுறை எடுத்த
ஆடவர்
ஒரே குதூகலம்

அன்று டிசம்பர் 26
கடலன்னையின்
அகோரத்தாண்டவம்
உருவெடுத்த நாள்
சுனாமி என்ற பெயரில்
சொந்தங்கள் சூறையாடபட்ட நாள்
கருமிருள் கலந்த அலைக்கரங்கள்
கட்டி இழுத்தது எம்மவரை

ஐயகோ
பார்தனிலே
பிணமாக கிடந்த
பரிதாபம் என்னவோ

உழைத்து உழைத்து
உரமேறிப் போன
மீனவர் உடல்கள்
சிதைந்து,
சின்னாபின்னம் பட்ட
கொடூரம் தான்
சகிக்குமோ?.

பெருமை மிக்க
பெண்கள் எல்லாம்
அலைக் கரங்களால்
சிதைக்கப்பட்டு
நிர்வாணமாகக் கிடந்த
அவலந்தான் என்னவோ?

படகேறி சென்று
ஊன் உறக்கம் மறந்து
பரிதவித்துச் சேர்த்த
சொத்து சுகம் எல்லாம்

சூறையாடப் பட்டதால்
சிந்தை கலங்கி நின்றவர்
எத்தனை பேர்!

அந்நியரின் ஆட்சிக்குள்ளும்
சொந்த பந்தம் அனைத்தோடும்
வாழ்ந்து பின்
அநாதையானவர்கள் எத்தனை பேர்!

ஆனாலும் அன்று தான்
கண்டோம்.
சிறிது மனிதத்தின் சாயலை
அர்த்தம் கவிழ்ந்த
வார்த்தைகளும்
சித்தம் சிதைந்த
செயல்களும்
சிறிதாக சீரழிய
மனிதம்
தலை தூக்கியதை அறிந்தோம்

எங்கிருந்தோ
சகோதரக் கரங்கள்
நீண்டுகொண்டதைக் கண்டோம்
மூர்க்கத்தனமும்

துவேசமும்
திரண்டு .... விளைத்திருந்த
சமூகக் கூட்டங்கள்
மாயைகளை அறுத்தெறிந்து
ஞானம் கொண்ட
கோலத்தை கண்டோம்

சுனாமி அலைகளால்
சூறையாடப்பட்டவர்கள்
உதவி அலைகளால்
உரமேற்றப் பட்டார்கள்
இருந்தாலும்...
மாறாவடுக்களாய்
நினைவஞ்சலிகள்
ஆண்டாண்டு தோறும்
நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

**அ.டில்லியவீனா**

# போரின் கொடுமை

ஊரிழந்தோம் உறவிழந்தோம்
உறக்கம் தான் நாமிழந்தோம்
காடிழந்தோம் கடலிழந்தோம்
கனவுகளை நாம் இழந்தோம்

வாழ வழி தந்த பயிர்
வளம் மிக்க நிலங்கள் தொட்டு
தாளமிடும் நதிகள் வரை
முழுவதையும் நாமிழந்தோம்

காப்புத் தந்த வீடு முதல்
கருணை தந்த கோவில் தொட்டு
கலக்கிய விளையாட்டரங்கம்
அத்தனையும் நாமிழந்தோம்.

உணர்வுகளை நாமிழந்தோம்
உல்லாசமாய் திரிந்த – எம்
உரிமைகளைத் தாமிழந்தோம்
இழப்பதற்கு ஏது இனி
உயிர் மட்டுமே மீதியாய்.........

ச.கஜேந்திரன்

# நினைவுகள்

அந்தோ....!
என் கடந்த காலம்
அவளை நான்
சந்தித்த வேளை
இலைதுளிர் காலம்
அவளுடன் பழகிய
நாட்கள்
வசந்த காலம்
அவள் என்னை விட்டு
பிரிகின்ற போது
இலையுதிர் காலம்
காலத்தில் கலந்து
கரையுண்டு
கடலில் மூழ்கியது
என் முதல் நேசம்.

**லோ.கம்சலா**

## கல்லூரி

வசந்தங்கள் மலரும்
பூஞ்சோலை,
கவலைகள் கலையும்,
கனவுகள் வளரும்,
புனித வளாகம்
கல்லூரி

ஆட்டங்கள் பாட்டங்கள் என
அன்புச் சண்டையிடும்
அழகிய தோட்டம்
கூட்டம் கும்மாளம் என
கூடிக் குலாவித் திரியும்
பசுமை நிறைந்த
பாசச் சோலை
கல்லூரி

கல்வியோடு
அறிவானந்தம் சிற்ப நுட்பம்
எனக் கலை பல தரும்
கற்பக தரு - கல்லூரி

**தி.சுரேஸ்**

# தாய்

கண்கண்ட தெய்வம்
யாரெனக் கேட்டலால்
என்னைக் கருவினுள் சுமந்திட்ட
தாயெனச் சொல்வேன்.

துன்பமே கொண்டு நாம்
துவண்டிடும் போது எம்மைத்
தேற்றியே ஆற்றிடும்
தாய்மடி என்பேன்

பசிக்கும் நிலை கண்டு
தவிக்கும் முகம் பார்த்து
பழந்தரும் சோலையும் தாய்

இடிக்கும் பிடி சோற்றை
தனக்கென எண்ணாது
கொடுக்கின்ற கோயிலுந் தாய்

நாளெல்லாம் பட்டினி தான் கிடந்தாலும்
ஒரு நாளிகை நம்பசி பொறுக்காத தாய்
மேலெல்லாம் பாடுபட்டு தனைவருத்தி
மேன்மை பெறச்செய்பவள் தாய்.

**அ.சுபாசினி**

# அஸ்தமித்த பிறகாயும்

உன்
வார்த்தைகள் ஒவ்வொன்றும்
வாண வெடியாய்..
செவிப்பறையைப் பிளக்க
என் விதியை எண்ணி
அழுகையூடும்
சிரிக்கிறேன்
அநாதரவாய்,
நான்.
காத்திருந்த காலங்களை
காலன் விழுங்க
கவி வடிக்கிறேன்
உயிரின் மீதம் வரை

உன் நினைவில், நான்
உருக்குலைந்து போனாலும்
என்றாவது ஓர் நாள்
என் நினைவு
உன்னைத் தாலாட்டும்
அது, நான்
உலகை விட்டு
அஸ்தமித்த பிறகாயும்
இருக்கலாம்

**அ.டில்லிபவீனா**

## தேடுகின்றேன்

முற்ற மணலில் நித்தம்
கதை பேசி
நிலாச் சோறு உண்ட
காலம் எங்கே?.

உழைக்கும் என் தந்தை
வைரக்கரம் பிடித்து
தத்தி நடை பயின்ற
வசந்தம் தான் எங்கே?.

ஊரார் கூடி வர
உறவுகள் கலந்து
ஊர் கோயில் திருவிழா
உடுக்குச் சத்தம் எங்கே?.

இத்தனை இன்பங்களையும்
நான் எப்படி
இழந்தேன்?.
தேடுகின்றேன்……..

**ச.டனுஷா**

## ஸ்திரக் காதல்

உண்மைக் காதல்
எகிப்திய மம்மி போல
உறங்காது – சாய்ந்த
கோபுரம் போல் சரிவு காணாது
அது சீனப் பெருஞ்சுவர் போல
பலமானது - இமயமலை
போல உயரமானது
நைல் நதி போல நீளமானது
சிகிரியா போல் சித்திரத்தால்
சிறை வைக்கப்பட்டது.
காதல்
புனிதமானது

**தி.சுரேஸ்**

## அன்பினால்

பரவியுள்ள பூமியும்
பரந்து நிறைந்த வானமும்
ஒன்று பட்டு சுழல்வது
ஒன்றியுள்ள அன்பினால்,

காற்று வீசுவதும்
தென்றல் தெம்மாங்கு பாடுவதும்
இயற்கை மீது கொண்ட
அன்பினால்,

மழை பொழிவதும்
ஆறு ஓடுவதும்
பயிர் மீது கொண்ட
அன்பினால்,

ஸ்வரங்கள்
சுருதியுடன் இணைவது
லயம் மீது கொண்ட
அன்பினால்,

கற்பனையும் கருத்தும்
கலந்து இசைவது
கவிதை மீது கொண்ட
அன்பினால்,

கனத்த மனிதரும்
கவிபாடி சென்றிடுவர்
சீறிடும் உயிர் கூட
சிந்தித்துச் சிரித்திடும்
அன்பினால்,

மனதின் அச்சாணி
அன்பு தான்
உலகின் அடித்தளம்
அன்புதான்

**அ.டில்லிபவீனா**

# எல்லாம் நீயே

அன்பெனும் வார்த்தைக்கு
அர்த்தம் நீ
ஆனந்தம் எனக்கு
தந்தவள் நீ
இன்னல்கள் பலவற்றை
கலைத்தவள் நீ
ஈடில்லா நட்பிற்கு
உதாரணம் நீ
ஊக்கியாய் எனதருகே
இருப்பவள் நீ
என்றும் என் நினைவில்
வாழ்பவள் நீ
ஏற்றமாய் என்னை
நினைப்பவள் நீ
ஐயம் என்பது என்மேல்
கொள்ளாதவள் நீ
ஒன்றோடு ஒன்றாய் இதயம்
கலந்தவள் நீ
ஓராயிரம் உறவுக்கு
ஒப்பானவள் நீ
ஔடதமாய் என் துன்பம்
தீர்த்தவள் நீ
உயிராய் என்னோடு
இருப்பவளும் நீயே

**சி.சரூபன்**

## உந்தன் நெஞ்சத்திற்கு

உயிரே !
வாசனை வார்க்கும் மலரே !
நீ தரும் மறுப்புக்களை
ஒரு முறை விடுத்து
நான் தரும் நேசத்தை
ஒரு நொடி உன் நெஞ்சத்தில்
பூட்டி வை
புரியும்
உயிரே!
உன் பார்வையால்
என்னிதயம் துடிக்கும்
என் பாசத்தால்
உன்னிதயம் புனிதமாகும்
அப்போது தான்
திறவு கோலின்றித் திறபடும்
உந்தன் நெஞ்சம்
தீர்வு அன்பென்று.

தி.சுரேஸ்

## நட்பு

தனிமையிலே நின்ற போது
தட்டி எனக்கு உயிர் கொடுத்தாய்
வலிகளை சுமந்த போது
வாட்டமதை தொலைக்க வைத்தாய்
விழிகள் சிந்நிய கண்ணீருக்கு
விடை கொடுத்து அனுப்பி வைத்தாய்
விலாசம் தொலைந்த போது
வீராப்புடன் எனை அணைத்தாய்
விசித்திரமான உலகிலே
என்னை வாழ வைத்தது
உன் உயிர்ப்பான நட்பு.

ச.டனுசா

## வாழப் பழகிக்கொள்

ஓ! மானிடனே!
வாழ்க்கை உனது தான்
வாழப் பழகிக் கொள்
சுற்றிச் சுழலும் பூமி
உன் சொந்தம் - அதில்
சந்தோசக் கவி வரைந்து
நித்தம் வாசி

கீழைச்சாரல் போல்
உன் எதிர் காலம்
அதற்காக உழைத்து
உழைப்பின் பலனை
ஒளியாகப் பாய்ச்சு

கனிவான இவ்வுலகில்
கல்வி மானாய்
சீர்மிகுந்த,
சிறந்த உழைப்பாளியாய்
நல் மனிதனாய்
வாழ்ந்து காட்டு

மதுபான போதையிலும்
மனம் மயங்கும் சுகங்களிலும்
வீணான புகைத்தலிலும்
உன் வாழ்க்கை
இல்லையடா

கடல் போன்ற இவ்வுலகின்
கலங்கரை விளக்கம் நீ
பூமி உனது தான்
வாழ்க்கை உனது தான்
வாழப்பழகிக் கொள்

தோல்வி நிலையில்லை
நீ அதிலே
மூழ்கி விடாதே
முயற்சி உனது தான்
முயலப் பழகிக் கொள்

பூமி எனும்
பூந்தோட்டத்தின்
றோஜா மலர் நீ
மலர்ந்து மணம் வீசு
மகிழ்வாக .......
வாழ்க்கை உனதே
வாழப்பழகிக் கொள்.

**அ.மல்லிபவீனா**

## புரிந்து கொள்

பிறக்கின்ற காதலை அழிக்காதே
அதற்குள் இருக்கின்ற காமத்தை அழி
உதிக்கின்ற பாசத்தைக் கலைக்காதே
அதற்குள் உருக்கொண்ட மோகத்தைக் கலை
உள்ளத்தைக் கொல்லாதே
அதற்குள் இருக்கின்ற கள்ளத்தைக் கொல்
கொடுத்திருக்கும் அன்பைக் குறைக்காதே
கொடுக்கப் போகும் துன்பத்தைத் துற
மனதிற்கு முதலில் கருணையை
கற்றுக்கொடு – மற்றவனுக்கு
மரணத்தைக் கொடுக்காதே
இருக்கின்ற சாந்தத்தைத் துறக்காதே
வருகின்ற சந்தேகத்தைத் துரத்து
தொடரும் அன்பை நிறுத்தாதே
தொடுக்கும் மோதலை நிறுத்து

**தி.சுரேஸ்**

# சூழல் சுத்தம் பேணுவோம்

இசையறிவோன் குழலெடுத்தால் இசை பிறக்கும்.
இயலறிவோன் தமிழ் படித்தால் நடை பிறக்கும்.
திசையறிவோன் படகெடுத்தால் தேசந் தோன்றும்.
திடமுடையோன் சுத்தமானால் ஆரோக்கியமாகும்.

படையுடையோன் நடைபோட்டால் பகை வீழும்.
பகுத்தறிவோன் கற்றதெல்லாம் பயனை நல்கும்.
மடை தடுத்த வெள்ள மதே வயலை வாழ்த்தும்.
மாசற்ற சூழல் தானே சுகத்தை தெளிக்கும்.

மழை பொழியும் பூமியில் தான் வளங்கள் தோன்றும்.
அறிவுடையான் ஏடொன்றே அறிவின் கன்று
அவ்வழியே சுகாதாரம் வந்த தென்பர்.
சுகமுடையோர் கரமெங்கும் திகழ்ந்து நிற்பர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
சுத்தமான சூழல் தானே சுகத்தை கொடுக்கும்
சுகாதாரம் இருந்தால் தான் சூழல் வளம் பெறும்
சுகமான வாழ்வே சொர்க்கத்தின் கதவாகும்.

காலமெல்லாம் சுத்தமாய் இருந்திட்டால்
கவலையில்லை எம் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும்
சூழ்ந்திருக்க சுகந்திரமாய் சிந்தனை ஒன்றிச்
செயற்படுவோம் சூழலதைக் காப்பதற்காய்.

**ந.துஷாந்தி**

## பெண்ணே...

கற்பனைக் கிலேசத்திற்கும்
சிற்றின்ப சாரலுக்கும்
உருவாக்கப்பட்டவளா?.
அடக்கி ஒடுக்கப்பட்டு
அடைந்து வாழும்
பெண்ணினமே! உன்
சிந்தனையை முடக்கி
சொல்லை முறித்து
செயலை மறித்து
விளையாட்டு காட்டுகின்றார்
விந்தை மனிதரறிவர்

பால் மணம் மாறாத
பச்சிளம் பெண்ணுக்கு! அன்று
பால்ய விவாகம்
பருவமடையாத பெண்ணுக்கும்
விதவைக்கோலம்

மொட்டை அடிப்பர்
முழத்துண்டு கொடுப்பர் - நற்
தரையில் உறங்கினாலும்
தப்பான வேலைதான் - அன்று
கண்ணீா வடித்த
பெண்ணினத்திற்கு

பற்றுக் கோல் தான் பாரதி!
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
நாய்களுக்கு வேண்டுமாம் - என
உரைத்தவன் அந்த பாரதி எனும்
உத்தமன்

ஏடுதனைப் பெண் தொட்டால்
ஏற்ற செயல் இல்லையென
இடிக்கப் பட்டவர்கள் - இன்று
ஏட்டை உருவாக்கும்
எழுத்தாணியாய் ஆகி விட்டார்
கற்பனைக்கு எட்டாத விண்வெளியில்
கல்பனா சாவ்லா
இருந்தாலும்
இன்னும் நீ முடக்கப் படுகின்றாய்.
அடக்கப்படும் பெண்ணுக்கு
கருவறை கூட
கல்லறை தான்.

இன்னுமேன் தாமதம்,?.
நிமிர்ந்து பார்!
நின்னைச் சூழ்ந்திருக்கும் - உன்
நினைவுகளை நிஷ்டூரமாக்கும்
அசுத்தங்களை நிர்மூலமாக்கு.

உடற்பசிக்காய் - உன்
உணர்வுகளைத் தின்னும்
உணரா ஜென்மங்களை
உதைத்து வீழ்த்து.

அடுப்பூதுவதற்கும்
அடக்கி ஆள்வதற்கும் - என்ற
அற்ப சிந்தனைகளை
அழித்தொதுக்கு!

அன்று
துச்சாதனன் சபைதனிலே
துகிலுரியப்பட்ட பாஞ்சாலி
அக்கினிப் பிரவேசம் செய்த
சீதாப் பிராட்டியார்
அநியாயத்தால் கல்லான
அகலிகை
இந்நிலை வேண்டுமா?
பொறுத்தது போதும் - உன்
அனல் வீசும் பார்வையிலே
அற்ப புழுக்கள்
அழியட்டும்! - உன்
கல்விப் புரட்சியால்
அடக்கு முறைகள்
ஒழியட்டும்!

சிரிப்பாலே
சிதிலமடைந்த மனிதங்கள்
சாம்பலாகட்டும்
மலராய் புரட்சி செய்
மடங்கட்டும் இழுக்குகள்.
எழுந்திரு!
உன்னால் முடியும்
ஏனெனில் நீ
புதுமைப் பெண்!

**அ.டில்லியவீனா**

# உழவர்

ஏழைத்தாய் வயிற்றில் உதித்து
ஏர் பிடிக்கும் ஏழை மகன்!
மண் உழுது பயன் ஈட்டும்
உழவர் தம் உண்மை கேள்!
துயர்பட்டும், வலிபட்டும் மீண்டெழுந்து வாழ்ந்திடுவார்!
களைப்பில்லா உழைப்புடனே —
பசி போக்கும் கடவுளிவர்!
பெருமிதம் சிறிதுமின்றி — பெரும்
பாடுபட்டு உழைத்திடுவர்.

உழவர் தம் கை ஓய்ந்தால்
உலக வயிற்றிற்கு பலத்த அடி!
உலகறியும் அவர் பெருமை
பகல் முழுதும் பாடுபட்டுப் பயிரிடுவார் - பின்பு
செழிப்பு மிக்க பயன் பெறுவர்
வாட்டும் வெயிலென்ன: வருத்தும் மழையென்ன
பதைக்க வைக்கும் புயலென்ன: பயமுறுத்தும் இடியென்ன
அவை யெல்லாம் தூசு காண் - உண்மை
உழைப்பாளி உழவர் கீழ்!

உண்மையினை கூறிடுவாய்
உழைப்பாளி உழவருக்கு
ஈடேதும் இப்பாரிலுண்டோ...!

**த.வித்தியா**

# வேண்டும் சமாதானம் ......

இயற்கை அன்னையின்
இனிய உடலினில்
இன்ப ஜதியில்லை
இரத்த ஆறுதான்!
சத்தியபுருஷர்கள்
சங்கமமானசந்நிதியில்
நீதியில்லை,
சத்தியத்தின் ஓலம் தான்
கனவுகளனைத்தையும்
புதைத்து விட்டு
கற்பனையில் வாழும்
உயிர்கள்.

சல்லடையான மனதுகளும்
சிரிப்பறுந்த முகங்களும்
ஊளையிடும் இரவுகளும்
உன்மத்தமாகப் போராடும்.
உணர்வறுந்த ஜீவன்கள் நாம்
நம் வானம் எப்போது விடியும்?.

உறவுகளை மறந்து,
நொந்துழலும்
அப்பாவி ஜீவன்கள் நாம்
நம் வானம் எப்போது விடியும்?

சிந்திப்பாரின்றி சிதைந்து போன
நம் வாழ்வு
மீண்டும் மலர்வதற்கு
வேண்டும் சமாதானம்!

தேடித்தேடித் திரிந்து விட்டு
தேடல்கள் நீண்டு
புரிதல்கள் இன்றிப் பிரியும்,
புதிரான உயிர்கள்!
விடுகதை தேசத்தில்
விடியாத விளக்கங்கள்!
கை கொடுக்கும் வேளையில்
கை தட்டிச் சிரிக்கும்
அயல் இனம்!

தின்னச் சோறு தேடி
திகைத்து திணறும்
சிறார்கள் !
வயிற்றுப் பசியால் வாடும்
வயோதிபர்கள் !
கேள்விகளைக் கேட்டு ஏக்கத்துடன்
நிற்கும் பெண்கள்!
இவர்கள் கேள்விக்கு
வேண்டும் சமாதானம்!
வேண்டும் சமாதானம்!!!

**அ.டில்லிபவீனா**

# நன்றிகளோரு....

'தூறல்' கவிதைத் தொகுப்பானது எழுத்துருவிலிருந்து அச்சேறுவதற்கான இசைவினை வழங்கி ஆற்றுப்படுத்தும் கல்லூரி முதல்வருக்கும் வாழ்த்துரைகள் வழங்கிய வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர், தமிழ் உதவிக்கல்விப்பணிப்பாளர், கல்லூரி முதல்வர், பிரதிமுதல்வர் ஆகியோருக்கும், கல்லூரிச் சமூகத்திற்கும், இக்கவிதைத் தொகுப்பை சிறப்புற வடிவமைத்த ஆர்.எஸ் நிறுவனத்திற்கும் எம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**- தமிழ் மன்றம் -**



# அகவை
# 80



சில காலம் தாய் மடியில்
பல காலம் உன் அடியில்
தவழ்ந்து நின்று உயர்வு பெற்றோம்
கல்லூரி அன்னையே! நீ
கல்வி தந்தாய், கலை தந்தாய் - பூமியில்
சிரம் நிமிர்த்த திறன்கள் தந்தாய்
மனங்கள் என்றும் மணம் பரப்பும்
மங்காத உன் புகழ்தனையே
அகவை எண்பதை தாண்டி அடிவைத்து
அமுத விழா காணும் - எம்
அழகிய அன்னையே! - நீ
மென் மேலும் சிறப்புற்று
நீடூழி வாழியவே!

- தமிழ் மன்றம் -

RS Printers, Sandilipay Tel : 021-2225413